
# History of Sri. Thillasthanam Swamy

( In Tamil translated by Sri. Rangarajan )




**SRI THILLASTHANAM SWAMY KAINKARYA SABHA**

**BANGALORE**

Web Site : www.thillasthanam-swamy-sabha.in

e-mail:tsksabha@yahoo.com

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# எதிராசன் வாசகத்தோர் எழில் சரிதம் - 17B

## ஸ்ரீமத் தில்லைஸ்தானம் ஸ்வாமி

## ஸ்ரீ சடகோப ராமாநுஜ மஹாதேசிகன்

---

ஸ்ரீமத் அஹோபில மடத்தில் இருபத்து நான்காவது மூர்த்தாபிஷிக்தராக எழுந்தருளியிருந்த மஹான் - ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ பராங்குச ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன். இவருடைய பூர்வாச்ரம வம்சாவளியில் அவதரித்தவரே பிற்பாடு 'தில்லைஸ்தானம் ஸ்வாமி' என்று ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீ சடகோப ராமாநுஜ மஹாதேசிகன். 1871 ஆம் ஆங்கில ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் நாள் சேஷாத்ரியாசார்ய தீக்ஷிதர் என்பாரின் திருக்குமாரராய்ப் பிறந்தார். ஸ்வாமி தம் சிறு வயதுகளை தில்லைஸ்தானம் என்ற க்ராமத்தில் (தஞ்சாவூர்/திருவையாறு அருகில்) கழித்தபடியால், 'தில்லைஸ்தானம் ஸ்வாமி' என அழைக்கப்பட்டார். 'நீலமேகாசார்யர்' என்று பெயர் இடப்பட்டு க்ரமப்படி ஏழு வயதில் உபநயனம் செய்விக்கப்பட்டு அன்று தொட்டே வேத அத்யயனம் செய்யத் தொடங்கி, மீமாம்ஸா, தர்க்க சாஸ்த்ரங்களையும் பயின்று வந்ததுடன் அக்னிஹோத்ராதி நித்யாநுஷ்டானங்களையும் க்ரமப்படி செய்து வந்தார். வெகு சீக்ரத்திலேயே ஸ்ரீமத் அஹோபில மடத்தின் பீடத்தை அலங்கரித்த 35 ஆம் பட்டம் ஸ்ரீமத் அழகியசிங்கரால் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்விக்கப்பெற்று அவரிடமே சிஷ்ய வ்ருத்தியைத் தொடங்கினார். இது பின் எழுந்தருளிய அழகியசிங்கர்களிடமும் தொடர்ந்து, நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய தத்வங்களில் அபார ஞான வ்ருத்தியை ஏற்படுத்திக் கொடுத்தது. 38 ஆம் பட்டம் ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப மஹாதேசிகனிடம் காலக்ஷேபம் தொடர்ந்து செய்து வந்து அவருடைய அந்தரங்க கைங்கர்யத்தில் ஈடுபட்டு இருந்த போது ஸ்ரீ ஸந்நிதி ஆராதகராக நியமிக்கப்பட்டு ஸ்ரீ மாலோலனுக்குத் திருவாராதனம் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார். பிறகு ப்ரேஷ மந்த்ர உபதேசமும் ஆயிற்று. இப்படி விசத ஞான ஸம்பூர்ணராய் ஸ்ரீ மத் அஹோபில மட கைங்கர்ய நிரதராய் எழுந்தருளியிருந்த ஸமயத்தில் ஒரு நாள் ஸ்வாமியின் கனவில் ஒரு

ஸ்ரீவைஷ்ணவர் தோன்றி இந்த பரந்த ஞானம் மிகுதியாகப் பிறருக்குப் பயன்படவும் ஸ்ரீவைஷ்ணவம் தழைக்கவும் ஆவன செய்ய வேண்டும் என்று சொன்னதாகத் தோற்றியது. இதை சிரமேற்கொண்ட ஸ்வாமி 40 ஆம் பட்டம் அழகியசிங்கரிடம் ஸந்யாஸ ஆச்ரம ஸ்வீகாரம் பெற்று, 'ஸ்ரீ சடகோப ராமாநுஜ மஹாதேசிகன்' என்று திருநாமம் சூட்டப்பட்டார் (30 செப்டம்பர் 1914). ஆகிலும் இவர் தொடர்ந்து தில்லைஸ்தானம் ஸ்வாமி என்றே அழைக்கப்பட்டார்.

ஸ்ரீ தில்லை ஸ்தானம் ஸ்வாமி, தேசம் முழுவதும் யாத்ரை செய்து சிஷ்யர்களுக்கு ஸ்ரீ ஸந்நிதி முறைப்படி பஞ்ச ஸம்ஸ்காரம் செய்துவைத்து விசிஷ்டாத்வைத க்ரந்தங்களையும் தத்வங்களையும் நன்றாக எடுத்து உபதேசம் செய்து நம் ஸம்ப்ரதாயத்தை வளர்த்து வந்தார். தனி ஸந்யாஸியாக இருந்தும் போக்குவரத்து வசதிகள் அதிகமாக இல்லாத காலத்தில் தென் இந்தியாவின் மூலை முடுக்குகளிலும் இவர் ப்ரயாணம் செய்தது மிகவும் போற்றத்தக்கது. இப்படி ஸஞ்சாரம் செய்து வந்த காலங்களில் அதிகமான சிஷ்யர்கள் இவரால் ஈர்க்கப்பட்டு இவரிடம் அன்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். இவர்களில் மைஸூர் (இப்போதைய கர்நாடகா) தேசத்தைச் சேர்ந்தோர் மிக மிக அதிகம். ஸ்ரீ தில்லைஸ்தானம் ஸ்வாமியின் பரந்த ஆழ்ந்த ஞானம் பல தரப்பட்ட மக்களுக்குப் பிரச்சனைகளை சமாளிப்பதிலும் சந்தேகங்களைத் தீர்த்து வைப்பதிலும் பயன் உள்ளதாக அமைந்தது.

ஒரு சமயம் மைசூர் நகரத்தில் வித்வான்கள் இடையே வேதோக்த ப்ராயச்சித்தங்களில் பெரிய சர்ச்சை நேர்ந்த போது பல வேத, ஸ்ம்ருதி வாக்யங்களைக் கொண்டு அலசி எடுத்து வைத்து அந்த சர்ச்சையைத் தீர்த்து வைத்தார். இந்தச் செயல் மேலும் மேலும் ஜனங்களுக்கு இவர் பால் ஈர்ப்பை ஏற்படுத்தியது. கோவில் நிர்மாணங்களிலும் நித்ய திருவாராதன உத்ஸவ முறைகளிலும் இவர் கை தேர்ந்த அதிகாரியாகத் திகழ்ந்தார். சிறு கதைகள் மூலமாகவும், எளிதான வார்த்தைகள் கொண்டும் அவர் உபதேசித்தது எல்லோருக்கும் புரியும்படியாகவும் பயனுள்ளதாகவும் அமைந்தது. இப்படி ஸநாதன தர்மத்தை மிகுந்த ச்ரத்தையுடன் வளர்த்து எல்லோரையும் எம்பெருமானின் அனுக்ரஹத்திற்குப் பாத்ரமாக்கினார். பல வருடங்கள் பெங்களூரில் துளஸீ தோட்டத்தில் (மெஜஸ்டிக் ஸமீபம்) அமைந்துள்ள ஸ்ரீ ப்ரஸன்ன க்ருஷ்ண ஸ்வாமி தேவாலயத்தில் வஸித்து வந்து வேத ஆகம சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட முறைப்படி திருவாராதன, உத்ஸவங்களை

நடத்தி வைத்து சீர்ப்படுத்தினார். இந்த தேவாலயத்தில் ஸ்ரீமத் ஆதி வண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் விக்ரஹத்தை ப்ரதிஷ்டை செய்து வைத்தார்.

இவருடைய வழிகாட்டுதலின் படி, 'பூர்வாசார்ய கைங்கர்ய ஸபா' என்ற ஸ்தாபனம் அமைக்கப்பட்டு ஆழ்வார் ஆசார்யர்களின் திருநக்ஷத்ரங்களையும் மேற்படி கோவில் பவித்ரோத்ஸவ அத்யயன உத்ஸவங்களையும் இன்று வரை சிறப்பாக நடத்தி வருகிறது. இப்படி வாழ்நாள் முழுவதும் ஸநாதன தர்மத்தைப் போற்றி வளர்த்த ஸ்வாமிக்கு ஏராளமான சிஷ்யர்களும் அபிமானிகளும் நிறைந்திருந்தனர். மேலும் அவர்களுடைய ஸந்ததிகளும் இன்று வரை ஸ்ரீ தில்லைஸ்தானம் ஸ்வாமியின் நினைவை மிகுந்த ப்ரியத்துடனும் மரியாதையுடனும் போற்றி வருகின்றனர்.

ஸ்வாமி தம் அந்திம காலங்களை ஸ்ரீரங்கத்தில் கழித்து, மே 4, 1956 அன்று திருநாடு அலங்கரித்தார். தசாவதார ஸந்நிதியின் ஸமீபத்தில் இவரது ப்ருந்தாவனம் உள்ளது. இப்படி இந்த ஸ்வாமி 42 வருஷங்களாக ஸநாதன தர்மத்தையும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தையும் போற்றி வளர்த்த ஒரு மஹான் ஆவார்.

<u>அருளியமைக்காக அநேககோடி க்ருதஜ்ஞதா ரூப ப்ரணாமங்களுக்கு உரியவர்:</u>


ஸ்ரீ S. சேஷாத்ரி ஸ்வாமி, செயலாளர், TSK சபா, பெங்களூர்.

மலம் அறு சீர் வேதாந்த தேசிகனை வேறு ஆகாது ஏத்துவார்
பாத அம்புயம் நமக்குப் பற்று.

வைபவத்தை மின்னூலாக்கி ஸமர்ப்பித்தவன்:

சந்தமிகு தமிழ்மறையினுடையவும் சந்தமிகு தமிழ்மறையோனுடையவும்
பரமானுக்ரஹத்தால் ஜீவிக்கும்

தாஸன்
திருவெவ்வுள். ராகவந்ருஸிம்ஹன், பெருமாள் கோவில்.






**Utsava Moorthy of Sri Thillaishtanam Swamy at Sri Prasanna Krishnaswamy Temple, Bengaluru**






## ***HH Sri. Thillasthanam Swamy  Tanian***



**Sri  Rangesha  Yathisha  Desikamanee  Paadaravindaashyrayam**

**Sri  Srivasa  Satari Yogi  Charana  Nyasta  Atma  RakshaBharam**

**Sri Rangesha Satari Samyami Guroho  Karunya  Vikshadpadam**

**Srimat   Lakshmana  Munim  Karunya  Purnam  Bhaje**

**Lakshmi   Narasimha   Divya   Paduka   Sevaka**

**Sri  Satagopa  Ramanuja  Yathindra  Maha Desikaya  Namaah**